RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2512

OPEN ACCESS

# நற்றிணையில் கயமனார் பாடல்கள் வழி அறியலாகும் வாழ்வியல் நெறிகள்

வி. கலாவதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராஜபாளையம் இராஜூகள் கல்லூரி, இராஜபாளையம்-626117, தமிழ்நாடு, இந்தியா

# Kayamanar's songs in Naritanai are the way to know the morals of life

V. Kalavathi [a, *]

[a] Department of Tamil, Rajapalayam Rajus' College, Rajapalayam-626117, Tamil Nadu, India

* Corresponding Author: skalavathiv@gmail.com

Received: 29-11-2024
Revised: 09-01-2025
Accepted: 17-01-2025
Published: 24-01-2025

**ABSTRACT**

Classical literature is the best literature depicting the antiquity of Tamil. They have the ability to convey the excellence and adaptation of human life. These literatures, instead of the elevation of life with matter, proved that the values of moral life could be spoken of by scholars and spread all over the world. The first of these classics, Natrinai, will be discussed in the essay on the principles of life sung by Kayamanar.

**Keywords:** Kayamanar, Nattrinai, Human life, Classical literature

## முன்னுரை

தமிழின் தொன்மையை விளக்கும் சிறப்புடைய இலக்கியங்கள் செவ்விலக்கியங்கள். மனித வாழ்க்கையின் சிறப்பையும், தகவமைப்பையும் எடுத்துரைக்கும் தன்மை பெற்றன. இவ்விலக்கியங்கள் பொருளுடன் வாழ்க்கை உயர்ந்தது என்பதற்கு மாற்றாக அறநெறி தலைப்பட்ட வாழ்க்கையின் விழுமியங்கள், சான்றோர்களால் பேசப்படக்கூடியன என்பதை மெய்ப்பித்து, உலகம் முழுவதும் பரந்துபட்டன. இத்தகைய சிறப்பு பொருந்திய செவ்விலக்கியத்தில் முதலாவதாக காணப்படும் நற்றிணையில் கயமனார் பாடியுள்ள பாடல்களில் காணலாகும் வாழ்வியல் நெறிகள் பற்றி கட்டுரையில் அறியலாம்.

## வாழ்வியல் நெறிகள்

மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாக அகவாழ்க்கை விளங்குகின்றது. அகவாழ்க்கை என்பது அறத்தோடு தொடர்புடையதாக அமைய வேண்டும் என்று ஆன்றோர் பலர் தம் பாடல்களின் வாயிலாக கூறியுள்ளனர். 'அறம்' என்பது அகவாழ்க்கைக்கும் பொருந்தும் படியான இலக்கணங்களைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் வகுத்து தந்துள்ளது. அதுபோல, இறையனார் களவியல் உரை, அகப்பொருள் விளக்கம் போன்ற இலக்கண நூல்கள் அக வாழ்க்கை கூறிய இலக்கணங்களை கூறுகின்றன. நற்றிணையில் கயமனார் பாடிய பாடல்களில் காணப்படும் அறம் சார்ந்த அகக் கருத்துக்களை வாழ்வியல் நெறிகளோடு கூறியுள்ள பான்மையினை,

1 நற்றாய் வருந்துதல்.
2 சிலம்புகழி நோன்பின் முறைமை.
3 கண்டோர் கூற்றில் வாழ்வியல் கூறுகள்.
4 தலைவன் பாங்கனுக்கு கூறுதல் என்ற தலைப்புகளின் கீழ் அறியலாம்.

## நற்றாய் வருந்துதல்

அக இலக்கியங்களின் சிறப்புகளில் ஒன்று அறத்தோடு நிற்றல் என்பதாகும். தலைவனை விரும்பும் தலைவியின் காதலை தலைவி தோழியிடம் கூறுவாள். தோழி செவிலியிடமும் செவிலி நற்றாயிடமும் இடமும் நற்றாய் தந்தை தனயரிடம் கூறுவாள். தலைவியின் நிலையை கண்ட நற்றாய் தலைவனோடு உடன் போக்கில் சென்று விடுவாளோ? என்று அஞ்சுகிறாள்,மேலும், கயமனார் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் நற்றாய் வருந்துவதாகவே அமைந்துள்ளது.. நற்றாயின் வருத்தத்தை தானே உணர்ந்து பாடி உள்ளதாக கயமனார் பாடல்கள் அமைந்துள்ளன. மகளைப் பிரிந்து நான் துன்புறுவது போல, எனது மகளை உடன் போக்கில் அழைத்துச் சென்ற தலைவனின் தாயும் துன்புற வேண்டும் எனும் பொருளில் கயமனார் பாடி உள்ள பாடல்,

"பொம்மல் ஓதியைத் தன் மொழிக் மொளீ

கொண்டு உடன் போக வலித்த

வன்கண் காளயை ஈன்ற தாயே"[1] (நற்றிணை-293)

என்று பாடப்பட்ட பாடலின் பொருளாவது எனது இல்லத்தில் இருந்த பொலிவு பெற்ற கூந்தலைக் கொண்ட என் மகளைத் தன் சொற்களால் மயக்கித் தன் வயப்படுத்திக் கொண்டு, உடன் அழைத்துச் செல்வதற்கும் எண்ணி துணிந்த வன்கண்மை மிக்க காளை போன்ற தலைவனைப் பெற்ற தாயும் துன்புறுவாளாக! என்பதாகும். தன் மகளைப் பிரிந்து தான் துன்புறுவது போல தலைவனின் தாயும் துன்பப்பட வேண்டும் என்று கூறுவதாக சொல்லப்படும் கருத்து இது போன்ற சூழ்நிலைகளில் இன்றும் கேட்க முடிகிறது. மேற்கண்ட கருத்திற்கு சற்று மாறுபட்ட கருத்தாக குறிப்பிட்ட பருவம் வந்த பின்பு தலைவி புக்ககத்திற்கு பயனுடையவள் என்பதனைக் கூறும் கலித்தொகை பாடல்,

"இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்

சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்

அறம்தலை பிரியா ஆறும்மற்று அதுவே"[2] (கலித்தொகை - 9 : 23-24)

கயமனார் நற்றாயின் மனநிலையில் ஒன்றி தானே தாயாக மாறி, தன் மகளுக்காக வருந்தி பாடியது போன்ற அமைப்புடைய பாடல்,

"வரி அணி பந்தும், வாடிய வயலையும்,

மயில் அடி அன்ன மாக்குரல் நொச்சியும்,

கடியுடை வியல் நகர் காண் வரத் தோன்ற"3 (நற்றிணை-305)

என்ற பாலை திணை பாடல் வரிகளில், மகளே நின் தோழி விளையாடிய வரி கொண்ட பந்தும், நீர் விடுவார் இல்லாததால், அவர் பாதுகாத்து வந்த வாடிய வயலைக் கொடியும், மயில் போன்ற இலையையும், கரிய பூங்கொத்தையும் உடைய நொச்சியும், காவலையுடைய அகன்ற மாளிகையில் காணப்படுகின்றன என்று நற்றாய் கூறுகின்றாள். தலைவி எந்த பணியும் செய்யாமல் தலைவனை எண்ணி வருந்தும் சூழலை, தாயின் மனநிலையை உணர்ந்து புலவர் பாடியுள்ள திறன் போற்றுதற்குரியதாகும்.. நற்றாய் தன் மகளாகிய தலைவியிடம் உன் தோழியும் உன்னை குறித்து என்ன சொல்லுகிறாள் தெரியுமா? என்று கூறும் போது,

"இலங்கு இலை வெள் வேல் விடலையை,

விலங்கு மலை ஆர் இடை நலியும் கொள் எனவே,"4 (நற்றிணை -305)

என்று இலை வடிவினதாக விளங்குகின்ற வெற்றி பொருந்திய வேற் படையை ஏந்திய காதலனை, மலை குறுக்கிட்ட கடத்தற்கு அரிய வழியிலே, துன்புறுத்துவாளோ என்று எனக்கு வருத்தம் உண்டாகிறது என்று கருதுவதாக நற்றாய் கூறுகின்றாள்.

## சிலம்புகழி நோன்பின் முறைமை

சங்க காலத்தில் பெண்கள் காலில் சிலம்பு என்னும் அணிகலனை அணிந்திருப்பர். திருமணம் முடிந்த பின்றை அதனை கழற்றுதல் சடங்காக பண்டைத் தமிழர் பின்பற்றியுள்ளனர். சிலம்பு கழி நோன்பு தாய் வீட்டில் தான் நடக்கும்.தலைவன் இல்லத்தில் வைத்து நடந்தால் அது ஏற்றுக் கொள்ள இயலாது என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. சிலம்பினை கழற்றி வைக்கும் தலைவி தனது தோழிகள் இதனை கண்டால் வருந்துவர் என்று எண்ணுகிறாள் என்று கூறும் பாடல்,

"வைகு புலர் விடியல் மெய் கரந்து, தன்ss கால்

அரி அமை சிலம்பு கழிஇ, பல் மாண்

வரி புனை பந்தொடு வைஇய செல்வம்"5 (நற்றிணை -12)

என்று கயமனார் பாடியுள்ளார். இருள் தீரும் வைகறைப்பொழுதில் தன் உடம்பு பிறருக்குத் தெரியாதபடி மறைத்து தன் காலில் அணியும் பருக்கைக் கல் போட்டு நிரம்பப் பெற்ற சிலம்பைக் கழற்றினாள். அந்தச் சிலம்பினை மாட்சிமைப்பட்ட வரிந்து புனைந்த பந்தோடு ஒருசேர வைக்க சென்றவள், அச்சிலம்பினை கண்ணுற்று வருந்தினாள். தோழிகள் சிலம்பினை கண்டால் வருந்துவார்களே என்று தலைவி எண்ணினாள்.

நற்றாய் தன் மகளுக்கு சிலம்புகழி நோன்பு விழா நடப்பதை காண இயலாத தாய் வருந்துகின்றாள். அருஞ்சுர நெறியில் என் மகளின் அடிகள் சென்று வருந்துகின்றனவோ? செல்லும் அச்சுர நெறிக்கண், பெற்ற யான் காணாதவாறு சிலம்பு கழிக்கும் விழா சிறப்பும் பிறர் காண நிகழும் என்று வருந்தும் நற்றாய் கூற்று பாடல் வரிகள்,

"அதர் உழந்து அசையின கொல்லோ-ததர்வாய்ச்

சிலம்பு கழிஇய செல்வம்

பிறருழைக் கழிந்த என் ஆயிழை அடியே"[6] (நற்றாய்- 279)

என்று கயமனார் நற்றாயின் எண்ணத்தை மனதில் படம்பிடித்தது போல் பாடி செல்கின்றார்.

கண்டோரைக் கண்ட நற்றாய் கழறல்

இலக்கியங்களில் கூற்றுகள் தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் போன்றோரின் கூற்றுகள் முக்கிய பங்காற்றுகின்றன.உடன்போக்கு பற்றி,

“போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்தல்

நீக்கம் இரக்கமொடு மீட்சி யென்றாங்கு

உடன்போக் கிடையீ டொருநால் வகைத்தே”[7] (அகப்பொருள் விளக்கம், நூ. 197)

என்று அகப்பொருள் விளக்கம் கூறியுள்ளது.

கண்டோர் கூற்று பற்றி குறைந்த அளவிலான பாடல்கள் மட்டுமே சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. கயமனார் பாடலில் கண்டோரைக் கண்ட நற்றாய் தன் மகளைக் கண்டீர்களா? என்று வினவுகின்றாள். தன் மகளின் மேன்மை தன்மைகளையும் அழகு நலனையும் கூறி, நற்றாய் வினவுவதாக புலவர் பாடியுள்ளார்.

"கோடு ஏந்து அல்குல் அரும்பிய திதலை,

வார்ந்து இலங்கு வால் எயிற்று, பொலிந்த தாஅர்

சில் வளை, பல் கூந்தலளே அவளே,

மை அணல் எருத்தின் முன்பின் தடக்கை"8 (நற்றிணை-198)

என்ற பாடல் வரிகளில் ஒளிபொருந்திய பற்கள் கொண்டவள், தொடுத்த மலரும் சிலவாகிய வளையலும், பலவாகிய கூந்தலும் உடையவள். என்று கூறி தன் மகள் இவ்வழி சென்றதை கண்டீர்களா? என்று கண்டோரிடம் வினவுகிறாள்.

## கண்டோர் கூற்று

தலைவன் தலைவியோடு பாலை வழி செல்கின்றான். செல்லும் அவ்வேளையில் இடைச்சுரத்தில், இவ்விருவரையும் கண்ட கண்டோர் கூறுவதாக கயமனார் பாடியுள்ளார்.நற்றாயின் மனநிலையை உணர்ந்தும், பிள்ளையைப் பெற்றோரின் துன்ப நிலையை அறிந்தும் பாடியதாக பாடல் வரிகள் அமைந்துள்ளன. இவரின் பாடல் எக்காலத்தும் பொருந்தும் தன்மை உடையனவாகும்.

"சென்றனள் மன்றஎன் மகளே

பந்தும் பாவையும் கழங்கும்எமக்கு ஒழித்தே"9 (ஐங்குறுநூறு - 377)

என்று ஐங்குறுநூறு பந்து, பாவை, கழங்கு என்று அவள் விளையாடிய பொருள்களை விட்டுவிட்டுச் சென்று விட்டாளே. அது ஏன்? நான் அவற்றைக் கண்டு அவளை நினைந்து வருந்தத்தானோ?" என்று நற்றாய் புலம்புகின்றாள்.அதுபோல,

"அந்தோ தானே அளியல் தாயே;

நொந்து அழி அவலமோடு என் ஆகுவள் கொல்,

பொன் போல் மேனி தன் மகள் நயந்தோள்?-

அம்சில் ஓதி இவள் உறும்

பஞ்சி மெல அடி நடை பயிற்றுமே" 10 (நற்றிணை-324)

என்ற வரிகளில் பந்தை காரி காலால் உருட்டி ஓடியாடி விளையாடுவதை போல அங்கும் இங்குமாக ஓடி அழகிய சிலவாகிய கூந்தலை உடைய இவளுடைய பஞ்சு போன்ற மெல்லிய அடிகள் நடைபயிற்றும் அக்காட்சி எல்லாம் கண்டு இப்பொழுது இவளை பிரிந்து இருக்கும் தாய் இரங்கத்தக்கவளே என்று தாயின் மனதில் எண்ணும் எண்ணங்களை உணர்ந்தவாறே கயமனாரின் காட்சிப்படுத்துதல் அமைந்துள்ளது.

## முடிவுரை

தலைவி தலைவனோடு உடன் போக்கில் செல்வது என்பது சங்க காலத்தில் களவு காலத்தின் ஒரு பகுப்பாக அமைந்துள்ளது. எல்லா புலவர்களும் உடன் போக்கு பற்றி பாடியிருந்தாலும், தலைவி உடன் போக்கில் செல்வதால் தாய்க்கு ஏற்படும் மன உளைச்சலை கயமனார் பாடல்கள் அதிகளவில் சுட்டிக்காட்டுகின்றன. கயமனார் தாயாகவே தன்னை உணர்ந்து ஒவ்வொரு பாடல்களிலும் மகளின் பெருமைகளையும், தன்னைப் பிரிந்து சென்ற மகளைப் பற்றிய வருத்தத்தையும் அதிக அளவிலான பாடல்களில் சுட்டிச் செல்கின்றார் என்பதை மேற்கண்ட கட்டுரை வழி அறிய முடிகிறது

## References

அகப்பொருள் விளக்கம், நூ. 197, கழக வெளியீடு, திருநெல்வேலி, இந்தியா

ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இந்தியா

கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இந்தியா

நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இந்தியா

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License